**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.25.08.2025**

**O.S. No.90/2021**

**பி.வா.சா.1 - தனலட்சுமி**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு எத்தனை வயது என்றால் 32. எனக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் காளிராஜ் என்றால் சரிதான். எனது ஊர் எது என்றால் மேலமரத்தோணி. வாதி கிருஷ்ணம்மாள் மேற்படி ஊரில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். வாதி கிருஷ்ணம்மாளை எனக்குத் தெரியும் என்றால் தெரியும். வாதி கிருஷ்ணம்மாள் தாவா சொத்தில் விவசாயம் செய்துவந்தார் நான் அதைப் பார்த்துள்ளேன் என்றால் சரிதான் நான் அதைப் பார்த்துள்ளேன் என சாட்சியம் அளித்துவிட்டு பின்னர் மாற்றி நான்தான் அனுபவிக்கிறேன் என சொல்கிறார். இந்த வழக்கிற்கு பிறகு நான் வாதியை சந்தித்து சமரசமாக செல்வோம் என சொன்னேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு பிறகு நான் வாதியை சந்தித்து வழக்குச் சொத்திற்கான பணத்தை கொடுத்துவிடுகிறேன் இடத்தை காலிசெய்யும்படி வாதியிடம் சொன்னேனா என்றால் ஆமாம் முதலில் சொன்னேன். இதிலிருந்தே வாதிதான் தாவா சொத்தை அனுபவிக்கிறார் என்பது தெரியவரும் என்றால் சரியல்ல வாதிக்கும் சொத்துக்கும் சம்பந்தம் இல்லை. தாவா சொத்து எனக்குஎப்படி பாத்தியம் என்றால் என் அப்பாவிடமிருந்து வாங்கினேன். தாவா சொத்து என் அப்பாவுக்கு எப்படி பாத்தியம் என்றால் என் அப்பா ராமரிடமிருந்து வாங்கினார். தாவா சொத்து ராமருக்கு எப்படி பாத்தியம் என்றால் அவர் ராமசாமியிடமிருந்து வாங்கினார். ராமசாமித்தேவரின் அப்பா பெயர் வீரையாத்தேவர் என்றால் சரிதான். வீரையாத்தேவருக்கு எத்தனை மனைவி என்றால் 2 பேர். வீரையாத்தேவர் முதல் மனைவிக்குப் பிறந்தவர் ராமசாமி என்றால் சரிதான். வீரையாத்தேவர் 2 வது மனைவி லட்சுமியம்மாள் என்றால் சரிதான். வீரையாத்தேவர் 2 வது மனைவி லட்சுமியம்மாளுக்கு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான்.

அதனால் தான் வாதி கிருஷ்ணம்மாளை தத்து எடுத்து வளர்த்தார்கள் என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் வாதி கிருஷ்ணம்மாளுக்கு என்ன உறவு என்றால் சித்தி. வீரையாத்தேவரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தினுடைய எல்கை என்ன என்றால் மேற்கு அமைச்சியாராம்மாள் புஞ்சை, கிழக்கு சக்திவேல், வடக்கு ஞாபகமில்லை, தெற்கு ரோடு. எதிர்வழக்குரையில் தாவா சொத்தை அனுபவித்து தீர்வை செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தீர்வை ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து லட்சுமியம்மாள் கிரையம் வாங்கிய சொத்து, நான் அதை உரிமையில்லாத ராமசாமியிடம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நானே வாதியின் அனுபவத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் மூலம் எந்த உரிமையும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் உரிமையில்லாத இடத்திற்கு வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.25 15:55:19 +0530